2012 ஏப்ரல் 10]

மட்டுமல்ல; யானைகளுக்கும் புத்துணர்ச்சி முகாம் நடத்தி, அவற்றின் வாழ்வில் வசந்தத்தை உருவாக்கிய எங்கள் இதய தெய்வமே! திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு நன்கொடையாளர்கள் மூலமாக யானை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எங்களது நெஞ்சார்ந்த நன்றியினை இந்த நேரத்திலே தெரிவித்து அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)*

[குறிப்பு: *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

2. தகவல் கோரல்

உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இன்றைக்கு ஒரு சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானம் எடுத்துவிட்டு, நாளைக்கு அதை* consider *செய்வோம்.* Please sit down.

3. விதி 110—ன்கீழ் அறிக்கை

தமிழ்ப் புத்தாண்டு தினம் முதல் உழவர் பெருவிழா முகாம்கள் நடத்துவது குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள்; அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11—10

மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘வயிற்றுக்குச் சோறிட வேண்டும், இங்கு வாழும் மனிதருக்கெல்லாம்’ (மேசையைத் தட்டும் ஒலி) என்ற மகாகவி பாரதியின் குறிக்கோள் நிறைவேற, பெருகிவரும் மக்கள்தொகைக்கேற்ப உணவு உற்பத்தியில் தன்னிறைவு பெறுவதும், உணவுப் பாதுகாப்பில் நிலையான தன்மை அடைவதும் மிக மிக*

2012 ஏப்ரல் 10] [டாக்டர் வி.எஸ். விஜய்]

தமிழகத்தில் நிலவுவதாலும், பொது மக்கள் இந்நோய் குறித்து அச்சம் கொள்ளத் தேவையில்லை. காய்ச்சல் ஏற்பட்டால் பொது மக்கள் அருகிலுள்ள அரசு மருத்துவமனைகளை அணுகி அதற்குரிய சிகிச்சை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி, தமிழக அரசு மேற்கொண்ட துரித நடவடிக்கைகளாலும், தீவிர சிகிச்சை முறையினாலும் இந்நோயின் தாக்கம் முழுவதுமாகக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை இம்மாமன்றத்தில் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

உறுப்பினர்களின் முன்னறிவிப்புகள்—*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சவுந்தரராசன், திரு. பாலகிருஷ்ணன், கவனியுங்கள். இப்போது மணி 11–58. இன்றைக்கு ஒரு சிறப்புக் கவன ஈர்ப்பு எடுத்துவிட்டேன். இன்னொரு சிறப்புக் கவன ஈர்ப்பை எடுத்தால் எவ்வளவு நேரம் ஆகும் என்பதைத் தயவுசெய்து உங்களுடைய யூகத்திற்கே நான் விடுகிறேன். (குறுக்கீடுகள்) நீங்கள் என்னுடைய கவனத்திற்கு அறிவிப்பு கொடுத்திருக்கிறீர்கள். சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. பதில் தயாரானவுடன் அதை எடுப்பது பற்றிப் பரிசீலிக்கப்படும், உட்காருங்கள்.*

6. அறிக்கைகள் அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் தலைவர், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*